JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

**MC. 17/2016**

**Petitioner and Respondent present.**

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) the day of **27.03.2026.**

**R.W. 2 Name: Manikandan S/o. Karuppaya**

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1.** சாட்சி சொல்வதற்கு எனக்கு அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். எண் அண்ணன் தான் நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல வந்தேன் என்றால் எனக்கு வழக்கை பற்றி தெரியும். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் ஒட்டன் சத்திரம் யூனியனில் பஞ்சாயத்து கிளர்க் ஆக பணி செய்து விட்டு ஓய்வு பெற்று விட்டேன். என் அண்ணனுக்கு ஒரு பெண் மற்றும் ஒரு மகன் ஆவார். மகன் எந்த ஆண்டு பிறந்தார் என்றால் 1991 ம் ஆண்டு பிறந்தார் தேதி மற்றும் மாதம் நினைவில் இல்லை. என் அண்ணன் மகன் என்ன படித்துள்ளார் என்றால் engineering என்று நினைக்கிறேன் ஆனால் உறுதியாக தெரியவில்லை. என் அண்ணன் மகன் எந்த கம்பெனியில் வேலை செய்கிறார் என்றால் எனக்கு தெரியாது என்ன சம்பளம் வாங்குகிறார் என்றால் ரூ. 50,000 வாங்குகிறார்.

2. என்ன ஆவணத்தை நான் பார்த்து ரூ. 50,000 வாங்குகிறார் என்று சொல்கிறேன் என்றால் ஆவணம் எதுவும் பார்க்கவில்லை என் அண்ணன் சொன்னதன் பேரில் சொல்கிறேன். மனுதாரருக்கும் எனக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரியல்ல. போக . வர போக்குவரத்து உள்ளது என்றால் சரிதான். மனுதாரருடன் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 4 மகன் மற்றும் 4 மகள்கள் ஆவார். மனுதாரர் சொந்தமா என்றால் இல்லை. என் அண்ணன் மகள் B.E படித்துள்ளார். என் அண்ணன் மகள் வேலைக்குச் செல்கிறாரா என்றால் இல்லை. திருமணம்

ஆகிவிட்டதா என்றால் இல்லை. என் அண்ணன் மகள் படிப்பு செலவுக்கான கட்டணத்தை செலுத்தி வருவதாக சொல்லியுள்ளேன் அதற்கான ரசீதுகள் உள்ளதா என்றால் இல்லை. என் அண்ணன் படிக்க வைக்கவில்லை மனுதாரர் தான் படிக்க வைத்தார் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. என் அண்ணனும், மனுதாரரும் 20 ஆண்டுகளாக ஒன்றாக வாழ்ந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அண்ணன் மனுதாரர் பெயரில் 1997 ம் ஆண்டு சொத்து வாங்கி கொடுத்தாக சொல்லியுள்ளேன் அந்த ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து செய்தேனா என்றால் இல்லை. 2002 ம் ஆண்டு பூர்வீக வீட்டை எழுதி வைத்தார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பூர்வீக இடத்தில் மனுதாரரும் எதிர் மனுதாரரும் சேர்ந்து வீடு கட்டவில்லை மனுதாரர் தன்னுடைய சொந்த உழைப்பில் வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. வீட்டு வரி மனுதாரர் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். மனுதாரர் செவிலியராக இருந்து ஓய்வு பெற்றுவிட்டதாக கூறியுள்ளேன் அந்த விவரம் எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரிதான்.

4.மனுதாரர் பணி ஓய்வு பெறும் போது ரூ. 18,00,000 லட்சத்திற்கும் மேல் வருமானம் வந்ததாக சொல்லியுள்ளேன் அதற்கான ஆவணத்தை நான் பார்த்தேனா என்றால் இல்லை. மனுதாரருக்கு ரூ. 30,000 பென்சன் வருவதாக சொல்லியுள்ளேன் அதற்கான ஆவணத்தை நான் பார்த்தேனா என்றால் இல்லை. நான் மனுதாரர் பெயருக்கு ரூ.50,00,000 மதிப்புள்ள காலியிடத்துடன் கூடிய வீட்டினை கிரையம் செய்து கொடுத்தார் என்று பொய்யாகசொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் மனுதாரர் வசதியாக வாழவில்லை என்றும், மனுதாரர் சிரமப்பட்டு வருகிறார் என்றால் சரியல்ல.

5. சத்திரப்பட்டியில் மனுதாரர் பெயருக்கு என் அண்ணன் இடம் வாங்கி கொடுத்தாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் பெருந்துறையில் தங்கி தான் வேலை செய்து வந்தார் என்றும் வாரம் ஒரு முறை தான் வீட்டிற்கு செல்வார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பின்னிட்டு 1994 ம் ஆண்டு வாக்கில் கொடைக்கானல் அருகில் உள்ள பெருமாள் மலைக்கு தனது வேலையை மாற்றிக் கொண்டு மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்து வந்தார்

என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் குடுமப பொறுப்போடு வாழ்ந்து வந்தார் என்றும் அவருக்கு எந்த கெட்ட பழக்கமும் இல்லை என்று மனுவிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அண்ணன் குடும்பத்தை நல்ல முறையில் கவனித்து கொண்டு மனுதாரருடன் நல்ல முறையில வாழ்ந்து வந்தார் என்று மனுவிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரரும், எதிர்மனுதாரரும் எத்தனை ஆண்டுகளாக பிரிந்து வாழ்ந்து வருகிறார் என்றால் 10 ஆண்டுகளாக பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள்.

6. என் அண்ணனுக்கு ஓய்வூதியம் மாதம் ரூ. 20,000 வருகிறது அது போக வாடகை வருகிறது என்றால் சரியல்ல. பூர்வீக சொத்தில் என் அம்மாவிற்கு வாடகை வருகிறது. என் அண்ணன் அவர் மகளுக்கு ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரிதான். நான் சொல்லும் அளவுக்கு மனுதாரருக்கு பென்சன் வருவதில்லை என் அண்ணன் மனுதாரருக்கு ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என் அண்ணன் என்பதால் அவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை